# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1519/26 - 2007 ඔක්තෝබර් 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2007.10.18

1519/26 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. - பீ 21/78

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி அமைச்சர், பேராசிரியர் வட்டரெக்க ஆராச்சிலாகே விஸ்வா வர்ணபால ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, மேற்படி சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு (2007 பெப்புருவரி 2 ஆந் தேதிய 1482/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) மேற்படி சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றாக கருதப்பட்டதான கட்டளையாகிய இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தைத் தாபிக்கும் கட்டளைக்கான அட்டவணையை, அக்கட்டளைக்கான அட்டவணையின் நிரை I இல் காணப்படும் "மிருக வைத்திய, விலங்கு விஞ்ஞான பீடம்" என்ற விடயம் தொடர்பில், அதன் நிரை II இலுள்ள நேரொத்த பதிவுகளின் முடிவில் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன்மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன் :

"5. மிருக வைத்திய, பொதுச் சுகாதார மற்றும் மருந்தியல் பகுதி"

பேராசிரியர் வட்டரெக்க ஆராச்சிலாகே விஸ்வா வர்ணபால,
உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2007, ஒற்றோபர் 4.

11-154

ச. வ. -பீ 21/78

## 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

### 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி அமைச்சர், பேராசிரியர் வட்டரெக்க ஆராச்சிலாகே விஸ்வா வர்ணபால ஆகிய நான், இலங்கை சப்பிரகமுவ பல்கலைக்கழகம் தொடர்பில் 1995 நவெம்பர் 7 ஆந் திகதிய 896/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறானதும், மேற்படி சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது அத்தகைய கட்டளைக்கான அட்டவணையின் நிரை I, நிரை II என்பவற்றில் அடங்கியுள்ள எல்லாப் பதிவுகளையும் சேர்த்து அத்தகைய கட்டளையின் (iv) ஆம் (v) ஆம் பந்திகளை நீக்கம் செய்து அவற்றிற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன்மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன் :–

"(iv) அத்தகைய பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் பீடங்களை குறித்தொதுக்குகின்றேன்:–

(அ) சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம் ;
(ஆ) முகாமைக் கற்கைகள் பீடம் ;
(இ) விவசாய விஞ்ஞானங்கள் பீடம் ;
(ஈ) பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் ;
(உ) புவிசார் விஞ்ஞானங்கள் பீடம் ; அத்துடன்

(v) பந்தி (iv) இன்கீழ் பல்கலைக்கழகத்திற்கு குறித்தொதுக்கப்பட்டதும் கீழே தரப்பட்ட அட்டவணையின் I ஆம் நிரையில் குறித்தொதுக்கப்பட்டதுமான அத்தகைய பல்கலைக்கழகத்தின் பீடம் ஒவ்வொன்றும் II ஆம் நிரையில் அத்தகைய ஒவ்வொரு பீடத்திற்கும் நேரொத்த பதிவுகளில் குறித்தொதுக்கப்படுகின்றதுமான கற்கைத் துறைகளை உள்ளடக்குதல் வேண்டுமென குறித்துரைக்கின்றேன்.

### அட்டவணை I

| *நிரை I*<br>*பீடம்* | *நிரை II*<br>*துறைகள்* |
|---|---|
| சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம் | 1. சமூக விஞ்ஞானங்கள் துறை |
| | 2. மொழிகள் துறை |
| | 3. ஆங்கில மொழி கற்பித்தல் துறை |
| முகாமைத்துவ கற்கைகள் பீடம் | 1. வணிக முகாமைத்துவத் துறை |
| | 2. கணக்கியல் மற்றும் நிதியியல் துறை |
| | 3. சுற்றுலா முகாமைத்துவத் துறை |
| விவசாய விஞ்ஞானங்கள் பீடம் | 1. விலங்கின உற்பத்தித் துறை |
| | 2. ஏற்றுமதி விவசாயத் துறை |
| | 3. விவசாய வணிக முகாமைத்துவத் துறை |
| பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் | 1. இயற்கை வளங்கள் துறை |
| | 2. பௌதீக விஞ்ஞானங்கள் மற்றும் தொழில்நுட்பவியல் துறை |
| | 3. உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் துறை |

புவிசார் விஞ்ஞான பீடம்

1. நிலஅளவையியல் மற்றும் புவிப்பாத்தியல் துறை
2. படவரைவியல், ஒளிப்பட அளவையியல், தொலை உணர்வு மற்றும் புவிசார் தகவல் முறைமைத் துறை"

பேராசிரியர் வட்டரெக்க ஆராச்சிலாகே விஸ்வா வர்ணபால,
உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2007, ஒற்றோபர் 4.

11-155

---

ச.வ.-பீ 21/78

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி அமைச்சர், பேராசிரியர் வட்டரெக்க ஆராச்சிலாகே விஸ்வா வர்ணபால ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, மேற்படி சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு (2006 யூலை 22 ஆந் தேதிய 1454/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) மேற்படி சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றாக கருதப்பட்டதான கட்டளையாகிய இலங்கை களனிப் பல்கலைக்கழகத்தைத் தாபிக்கும் கட்டளைக்கான அட்டவணையை அத்தகைய கருதப்பட்ட கட்டளைக்கான அட்டவணையின் நிரை II இல் காணப்படுவதாகிய அவ் அட்டவணையின் நிரை I இல் காணப்படும் வைத்திய பீடம் என்ற விடயத்திற்கு நேரொத்தவாறான 13 ஆம் விடயத்திற்குப் பதிலாக (சமூக நோயியல் துறை) "பகிரங்க சுகாதாரத் துறை" என்னும் விடயத்தை இடுவதன்மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்.

பேராசிரியர் வட்டரெக்க ஆராச்சிலாகே விஸ்வா வர்ணபால,
உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2007, ஒற்றோபர் 4.

11-156

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.